

ஆபிரகாம் லிங்கன்

அடிமைத் தளையறுத்த மகாத்மா

ஆபிரகாம் லிங்கன்

பாஸ்டன் நகரிலுள்ள
ஜான் ஹாங்காக்
மூச்சுவல் லைப் இன்சூ
ரன்ஸ் கம்பனியார்
அனுமதியுடன் திருப்பிப்
பிரசுரிக்கப்படுகிறது.

''...மக்களுடைய, மக்களுக்கான, மக்கள் ஆட்சி புவியிலே என்றென்றும் நிலைத்திருப்பது உறுதி.''


— லிங்கனது கெட்டிஸ்பர்க் பிரசங்கம்

ஆபிரகாம் லிங்கன்

ஆபிரகாம் லிங்கன் மரக் குடிசையிலே ஏழையாகப் பிறந்தார். வெள்ளை மாளிகையிலே ஜனாதிபதியாக உயர்ந்தார். ஓராண்டுக்குக் குறைவான பள்ளிப் படிப்புப் பெற்றிருந்தவர் சொல்லிலும் எழுத்திலும் செல்வனாக விளங்கினார். வாழ்க்கையில் எதிர்ப்பட்ட ஏமாற்றங்களுக்கும் தோல்விகளுக்கும் ஈடு கொடுத்து வெற்றி பெற்றார். வரலாறு புகழும் தலைவனானார்; மக்கள் இதயத்தில் நீங்கா இடம் பெற்றுவிட்டார்.

அமெரிக்க நாட்டில் கெண்றக்கி எனுமிடத்தில் மக்கள் நெருக்கமற்ற காட்டில் மரக் குடிசையொன்றில் 1809-ம் ஆண்டு பெப்ரவரி 12-ம் தேதி தோன்றினார். மகாத்மா லிங்கன் பிறந்த இந்தப் புனிதமான சிறு குடிசையைக் காக்கும் நோக்கத்துடன் அமெரிக்க அரசாங்கம் அண்மையில் இங்கு ஒரு கற்கோட்டையை எழுப்பியது.

லிங்கன் பிறந்த கெண்டக்கி மரக்குடிசை



1816-ல் லிங்கனும் அவரது பெற்றோரும் காட்டு மார்க்கமாய் நூறு மைல் நடந்து இண்டியானு எனுமிடத்துக்கு வந்து சேர்ந் தனர். அது பனிக் காலம். அவர்களுடைய புது வீட்டுக்கு மூன்று புறந்தான் தடுப்பு; எருமைத் தோலான திறப்பே வாயில். இந் தக் குச்சில் ஓராண்டு கழித்த பின்னர் மரக் குடிசையொன்று கட்டிக்கொண்டனர். அதிலும் தரை மண் தரையே. ஓராண்டு சென்ற பின்னர் லிங்கனின் தாயார் காலஞ்சென்ருர். "என்னை ஆளாக்கி எனக்கு வழி காட்டியாக விளங்கும் என் புனிதத் தாய்க்கே நான் கடமைப்பட்டவன்" என்று உருக்கமாக லிங்கன் பின்னுளில் எழுதினுர்.

கல்வி

ஆபிரகாம் லிங்கனும் பள்ளிக்கூடம் போனதுண்டு. ஒன்பது வயது வரை இடைக்கிடையே பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கிருர். அவர் பள்ளிக்கூடம் போன நாட்களையெல்லாம் எண்ணிஞல் ஓர் ஆண்டு கூடத் தேருது. அவர் தானுக எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார். எழுதுவதற்கு அவரிடம் காகிதமுமில்லை, பென்சிலு மில்லை. கரித்துண்டை வைத்துக்கொண்டு மரத்தாலான மண் வெட்டியில் பாடம் எழுதினுர்; கணக்குப் போட்டார். பிறகு எழு தக் காகிதம் கிடைத்தது. ஒரு காட்டுச் செடியின் வேரைப் பிடுங்கி மைகூட்டி, வான்கோழி இறகை அதில் தோய்த்து எழுதலானுர்.

காடு திருத்தவும், உழுது பயிரிடவும் லிங்கன் தன் தந்தை யாருக்கு உதவி செய்தார். அண்டை வீட்டாருக்கும் அவர் ஒத் தாசையாயிருந்தார். இடையே, கிடைத்த புத்தகங்களையெல்லாம் கரைத்துக் குடித்தார்.

லிங்கன் புத்திசாலித்தனமாகவும், விகடமாகவும் பேசுவார். கதை சொல்வதில் சமர்த்தர். ஊரில் ஒரு வைபவம் என்ருல் அவருக்கு முதல் அழைப்பு வந்துவிடும். நீதி, நியாயம் என்ருல் அவர் தம் உயிரையுங் கொடுப்பார். நாவன்மையும், நியாயப் பற்றும் அவரை வழக்கறிஞர் தொழிலில் நாட்டம் கொள்ளச் செய்தது. அவரிடம் சட்ட நூல்கள் இல்லை. புத்தகம் வாங்கப் பணமுமில்லை. ஆகவே அவர் பன்னிரண்டு மைலுக்கப்பாலிருந்த ஒரு நண்பரைத் தேடிச் சென்று சட்டப் புத்தகமொன்றைப் படித்து வந்தார்.

படகோட்டி

ஆயிரத்து எண்ணூறு மைல்களுக்கப்பால் மிஸிஸிப்பி ஆற்ரே ரம் நியூ ஆர்லியன்ஸ் என்ருெரு பட்டினம் இருந்தது. அது

பருத்திக்குப் பேர்போன இடம். அங்கு போய்க் காய்கறி, இறைச்சி வியாபாரம் செய்து வருமாறு லிங்கனை அவரது நண்பரொருவர் பணித்தார். லிங்கன் ஒரு தோணியில் பிரயாணம் செய்தார். அது நடந்தது 1828ல்.

1830ல் லிங்கன் குடும்பம் இல்லியனாய்க்குக் குடிபெயர்ந்தது. அங்கு இன்னொரு மரக்குடிசை எழும்பியது. மரம் வெட்டுவதில் லிங்கன் வல்லவர். பல்லாண்டுகளுக்குப் பிறகு அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, “மரம் வெட்டி” என்று அழைக்கப்பட்டார். அவருக்கு ஒரு காற்சட்டை தைத்துத் தந்த அம்மையாருக்குப் பிரதியாக ஆயிரத்து நானூறு மரக்கட்டைகளை ஒரு சமயம் உடைத்துக் கொடுத்தார்.

அடுப்பு வெளிச்சத்தில் படிக்கிறார்



மீண்டும் ஒரு தடவை லிங்கன் படகில் நியூ ஆர்ளியன்ஸ் சென்றார். அப்போதுதான் அவர் நீக்ரோக்கள் சிலர் கை விலங்குகள் மாட்டப்பட்டு, விலை கூறப்பட்ட காட்சியைக் கண்டார். மனம் நைந்தார். கொதித்தெழுந்து, தமக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அடிமை முறையை அழித்துவிடப் பாடுபடுவதாக அங்கேயே அவர் உறுதி பூண்டார் எனக் கூறுவார்கள். அடிமைத் தளையறுத்த ஆபிரகாம் லிங்கன் எனத் தமது பெயர் வரலாற்று ஏடுகளிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பெற்று சூரிய சந்திரர் உள்ளளவும் விளங்கும் என்பதை அவர் அன்று உணர்ந்திருக்க மாட்டார்.

அரசியல் ஈடுபாடு

நியூ ஆர்ளியன்ஸிலிருந்து திரும்பியதும் இல்லியனாய் ராஜ்யத்தில் நியூ ஸேலம் எனுமிடத்தில் லிங்கன் குடியேறினார். அங்கு அவர் சில ஆண்டுகள் வசித்தார். இலக்கணம் படித்ததும் அங்கேதான். மளிகைக் கடையொன்றில் வேலை பார்த்து வந்தபோது நாணயஸ்தர் என்று பெயரெடுத்தார். "யோக்கியர் ஆபே" என்று அவருக்கு ஊரார் செல்லப் பெயர் சூட்டினார்கள். ஆறு சதம் பாக்கி கொடுக்கத் தவறிவிட்டதற்காக ஒரு சமயம் அவர் இரண்டு மைல் நடந்து ஆளைத் தேடிக் காசை ஒப்படைத்தாராம். நேர்மையின் சிகரம் என அவர் அழைக்கப்பட்டதில் என்ன விநோதம்? இந்த வேளையில் இவர் வேலை பார்த்த கடை "திவால்" ஆகிவிட்டது. லிங்கன் வேலையிழந்து நின்றார்.

அப்போது (Black Hawk) சண்டை நடந்தது. அதில் நியூ ஸேலம் வாசிகள் லிங்கனைக் காப்டனாகத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் லிங்கனின் போர்ப் பிரவேசத்திற்கு முன்னரே போர் முடிந்துவிட்டது.

1832ல் லிங்கனுக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் எழுந்தது. இல்லியனாய் ராஜ்ய சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்டார். அவர் வாழ்ந்திருந்த இடத்தைச் சுற்றியிருந்த மக்கள் யாவரும் அவருக்கே வாக்களித்தனர். இருந்தும் அவர் வெற்றிபெறவில்லை.

இல்லியனாய் சட்ட சபையில்

1834-ல் லிங்கன் மீண்டும் தேர்தலுக்கு நின்றார். அவர் பேசுவதற்கு முன் "இவரைக் காட்டிலும் நல்ல சரக்கு கட்சிக்குக் கிடைக்கவில்லையா?" என்று ஏளனமாகப் பேசிய ஒருவர், லிங்கன் பேச்சைக் கேட்டுவிட்டு "எல்லா அபேட்சகர்களிலும் பார்க்க அறிவாளி" என்று மனமாரப் புகழ்ந்தார். சந்தேகமென்ன? லிங்க



மிஸிஸிப்பி ஆற்றில் படகு வலிக்கிருர்

னுக்கே வெற்றி. அதன் பின்னர் மூன்று முறை தொடர்ந்து தேர்தலில் வென்று ராஜ்ய சட்ட சபையில் லிங்கன் சிறப்பாக விளங்கினுர்.


முதல் தடவை தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு கடன் வாங்கின பணத்தில் புதுச் சட்டைகளை வாங்கி அணிந்து லிங்கன் சட்ட சபை சென்ருர்.

அப்போதுதான் ஸ்டீபன் ஏ. டக்ளஸ் என்பவரை லிங்கன் சந்தித்தார். டக்ளஸ் அவருடன் சதா போட்டி போட்ட பேர்வழி.

1836-ல் 27-வது வயதில், லிங்கன் வழக்கறிஞராக அனுமதிக் கப்பட்டார். ஸ்பீட் என்ற அன்பருடன் சேர்ந்து வாழ்ந்தார்.

சட்ட சபையில் அவர் எட்டாண்டுகள் தொண்டாற்றினுர். அதே சமயம் வழக்கறிஞர் தொழிலிலும் இருந்தார். தொழிலை முன் னிட்டு நாடு முழுவதும் சுற்றினுர். 1843-ல் வில்லியம் ஹெண்டன் என்பவரோடு கூட்டாக வழக்கறிஞர் தொழில் தொடங்கினுர்.

நியாயம் இருக்கும் பக்கமே லிங்கன் வழக்காடுவார். பொய் யர்கள் சார்பில் தோன்றமாட்டார். ஒருசமயம் அவர் தாம் எடுத்த வழக்கு நியாயமற்றது என்று கண்டு கொண்டவுடனே வழக்காடு வதை நிறுத்திவிட்டார். தமது கட்சியைத் தெளிவாக எடுத்



இல்லியனுய் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் லிங்கன்

துரைக்க அவர் கதை சொல்வது வழக்கம். அவர் சொன்ன கதைகளில் பொருட்செறிவும், வேடிக்கையுமிருந்தது. இல்லிய னுய் ராஜ்யமே வழக்கறிஞர் லிங்கனைப்பற்றி பெருமை கொண்டது.


ஆன் ரட்லெட்ஜ் என்ற பெண்மணியைக் காதலித்தார் லிங்கன். அவளும் அவரைக் காதலித்தாள். ஆனல் மணமாகு முன் அவள் இறந்தாள். லிங்கன் பித்துப் பிடித்தவர்போலிருந் தார். அந்நிலே கண்டு நண்பர்கள் பயந்தனர்.

பல வருஷங்கள் கழிந்தன. 1842-ல் மேரி டாட் என்னும் பெண்மீது லிங்கன் காதல் கொண்டார். சட்ட சபையில் போட்டிக் காரனுக நின்ற ஸ்டீபன் டக்ளஸ் காதல் விஷயத்திலும் போட்டி யாக முனைந்தார். ஆனல் இக்காதற் போட்டியில் லிங்கனே வென்ருர். 1842 நவம்பர் 4-ந் தேதி லிங்கன் மேரியின் கரம் பற்றினுர். இத்தம்பதிக்கு நான்கு ஆண் குழந்தைகள் பிறந்தன. ஒரு மகன்தான் பிற்காலத்தில் இங்கிலாந்துக்கு அமெரிக்க தூதரா கச் சென்ற ராபர்ட் டி. லிங்கன்.

அடிமைத்தனம்

அமெரிக்காவின் மத்திய சட்ட சட்டசபைக்கு (ஜனப் பிரதிநிதிகள் சபை) லிங்கன் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம் நாடெங்கும் அடிமை பற்றிய பேச்சு நிலவிற்று.

"அடிமை முறை அநியாயம் இல்லே என்ருல் எதுவுமே அநி யாயம் இல்லே" என்று மத்திய சட்ட சபையில் லிங்கன் முழங் கினுர். அமெரிக்க மக்கள் மேற்றிசை நோக்கிச் சென்று புதுப்புது



ஜனதிபதி தமது குடும்பத்தாருடன்

இடங்களில் குடியேறத் தொடங்கிய காலம் அது. புது இடங்களி லும் அடிமை முறை புகுந்துவிடக் கூடாது என்று லிங்கன் அரும் பாடுபட்டார். தலைநகர் வாஷிங்டன் உள்ள இடம் கொலம்பியா டிஸ்திரிக்ட் எனப்படுவது. அது நாடு முழுவதற்கும் பொது. இப்பொதுவிடத்திலுள்ள அடிமைகளையாவது விடுவித்துவிடவேண் டும் என்று லிங்கன் மிக மிக முன்றார்; முயற்சி கைகூடவில்லை.

மீண்டும் அவர் மத்திய சட்ட சபைத் தேர்தலுக்கு நின்றார். தோல்வியுறவே, பழையபடி வழக்கறிஞர் தொழிலைக் கைக் கொண்டார். அவருக்கு பணமுடை அதிகரித்தது. தமது குடும் பச் செலவுக்கு மாத்திரமன்றி தமது தந்தையாருக்கும் மாற்றாந் தாய்க்கும் பணம் அனுப்ப வேண்டியிருந்தது. மாற்றாந்தாய் வயிற்றுத் தம்பிக்கும் அவர் பொருளுதவி செய்தார். தந்தை இறந்த பின், பழைய வீட்டின் மீதிருந்த அடமானத்தைக் கொடுத்து வீட்டை மீட்டார். "காம்பில்லாத குடை; அதைப் பிடித்துக்கொள்ள ஒரு சரடு; தோள்மீது பழுப்பு நிற சால்வை; காகிதங்களும் துணிமணிகளுமடங்கிய சமுக்காளப் பை" இவற்றுடன் அவர் தோற்றமளித்தார்.

1854–ல் மத்திய அரசாங்கத்தால் ஒரு சட்டம் நிறைவேறிற்று. கான்ஸஸ்—நெப்ராஸ்காச் சட்டம் என்பது அதன் பெயர். அதை உருவாக்கியவர் லிங்கனது பழைய "பிரதிவாதி" ஸ்டீபன் டக்ளஸ். கான்ஸஸ், நெப்ராஸ்கா என்னும் புது ராஜ்யங்கள் அமெரிக்க யூனியனோடு ஒன்றுய்ச் சேரும் காலத்தில், அவை அடிமைகளை வைத்திருக்கவும் விற்கவும் குடிகளுக்கு உரிமை உண்டா இல்லையா என்பதைத் தாங்களாகவே முடிவு செய்து கொள்ளலாம் என்று அச்சட்டம் கூறியது. எனவே புதிய இவ்விரு ராஜ்யங்கள் உள்ள அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியில் அடிமை முறை பரவ

வழி செய்தது கான்ஸஸ்—நெப்ராஸ்காச் சட்டம்.

இந்தச் சமயத்தில்தான் குடியரசு (ரிபப்ளிக்கன்) கட்சி தோன்றியது. அதன் ஸ்தாபகர்களுள் ஒருவர் லிங்கன். 1856-ல் பிலடெல்பியா நகரில் நடைபெற்ற குடியரசுக் கட்சி மகாநாட்டில் தேர்தலில் உபஜனாதிபதியாகப் போட்டியிட லிங்கன் பெயர் குறிப்பிடப்படுவார் என்று பேச்சு அடிபட்டது. ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

டக்ளஸ் இல்லியனாய்க்குத் திரும்ப வந்து தமது சட்டம் நியாயமானது என்று வாதிக்கலானார். வெகுண்டெழுந்தார் லிங்கன். மூன்று மணி நேரம் சொன்மாரி பொழிந்தார். கான்ஸஸ்—நெப்ராஸ்காச் சட்டம் அநியாயம் என்று காட்டினார். மனித உரிமைபற்றி அன்று அவர் நிகழ்த்திய சொற்பொழிவை அதற்கு முன் யாரும் கேட்டிரார்.

1858-ல் ஜனநாயக (டெமாக்கிராட்டிக்) கட்சி டக்ளஸை மத்திய மேற் சபையாகிய செனட் தேர்தலுக்கு தனது அபேட்சகராக நியமித்தது.

குடியரசுக் கட்சியினர் "எங்கள் ஏக தலைவன் மகாகனம் லிங்கன் அவர்களே" என்று செனட் தேர்தலில் போட்டியிட லிங்கனை நிறுத்தினர். அதை ஏற்றுக்கொண்ட லிங்கனின் பேச்சைக் கேட்க இல்லியனாய் ராஜ்ய சட்டசபையில் சனக் கடல் பொங்கி நின்றது.

"இரண்டுபட்ட வீடு நிற்காது. பாதி உரிமையாகவும், பாதி அடிமையாகவும் இந்த அரசாங்கம் நீடித்து நிலைக்காது" என்று அவர் சொன்ன மணி மொழிகள் இன்றும் அமெரிக்கர் செவிகளில், "இதுதான் நியாயம், இதுதான் உண்மை" என்று ரீங்காரம் செய்கின்றன.

அடிமை முறை குறித்து பொது மேடையிலே தம்மோடு தர்க்கம் செய்ய வருமாறு டக்ளஸுக்கு லிங்கன் சவால் விடுத்தார். ஏழு இடங்களில் இந்தச் சர்ச்சை நடந்தது. நாட்டுப்புற வாசிகளும் திரண்டு வந்து கேட்டனர்.

டக்ளஸ் அழகொழுகப் பேசினார். மடக்கிப் பேசிய லிங்கனின் சொற்களில் நேர்மையும் அழுத்தமும் மிளிர்ந்தன. லிங்கன் இதயத்தினின்று எழும்பிய சொற்களை வெளியிட்டார். அவருடைய இதயம் பேசிற்று. அடிமை முறை வேண்டுமா கூடாதா என்பதை நிர்ணயிக்க மக்களுக்கு உரிமையுண்டு என்று டக்ளஸ் சொன்னார். "யாரும் யாருக்கும் அடிமை இல்லை. இந்த முறை ஒழியவேண்டும்" என்ற விடுதலை வாசகத்தை கம்பீரமாக முழங்கினார் லிங்கன்.

செனட் தேர்தலில் டக்ளஸ் வென்றார். எனினும் லிங்க

னுக்கு செனட்டர் பதவியை விட மேலான ஜனாதிபதி பதவி காத்துக்கொண்டிருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி

லிங்கனின் நாவன்மை நாடெங்கும் பரவிற்று. டக்ளஸ் ஒரு தேர்தலில் தான் வென்றார். வீரர் லிங்கன் மக்கள் இதயத்தில் அழியாத இடம் பெற்றார். பலப்பல இடங்களிலிருந்தும் லிங்கனுக்கு அழைப்பு வந்தது. அவரும் பேசினார். 1860–ல் அவர் நியூயார்க் நகரத்தில் கூப்பர் நிலையத்தில் பேசினார். "நியூயார்க் மக்களின் உள்ளத்தைத் தமது முதல் பிரசங்கத்திலேயே கொள்ளை கொண்ட பேச்சாளர் இவர் ஒருவரே" என்று "நியூயார்க் ஹெரல்டு டிரிபூன்" தினசரி புகழ்மாலை சூட்டியது. லிங்கனின் பேருரையை அச்சடித்து வழங்கினார்கள். ஜனாதிபதியாவதற்கு இந்தப் பேச்சு அவருக்குப் பெரிதும் துணை செய்வதாயிற்று.

1860–ல் ஜனாதிபதித் தேர்தல் நெருங்க நெருங்க, அடிமை முறையற்ற வடபாகத்துக்கும், அடிமை முறை கொண்ட தென் பாகத்துக்கும் பகைமை கடுமையாய் முற்றியது. 1860 நவம்பர் 6–ந் தேதி ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த பெப்ரவரி பிறக்கு முன்பே, எழு தென்பாக ராஜ்யங்கள் அமெரிக்க ஐக்கியத்தினின்றும் பிரிந்து தனிக் கூட்டாக ஆட்சியமைத்துக்கொண்டன. தனி தர்பார் நடத்தப் போவதாய் அவை கூட்டறிக்கை விட்டன. இத்தனிக் கூட்டுத் தொகுதி அதற்கென ஜெபர்ஸன் டேவிஸ் என்பவரை ஜனாதிபதியாகவும் தெரிவு செய்துகொண்டது.

மார்ச் நான்காந் தேதி லிங்கன் ஜனாதிபதி பதவியேற்றார். மத்திய சட்ட சபையில் நிகழ்த்திய பதவியேற்பு உரையில் அவர் தெள்ளத் தெளிவாகத் தம் நிலைமையை எடுத்துச் சொன்னார். "யுனைட்டெட் ஸ்டேட்ஸ் என்னும் இந்த ராஜ்யங்களின் ஐக்கியம் நிலையானது. இது உறுதி. இந்த ஐக்கியத்தினின்றும் ஒரு ராஜ்யமும் தான்தோன்றித்தனமாகப் பிரிந்துவிட இயலாது; பிரிவினை சட்டப்படி செல்லாது."

ஆபிரகாம் லிங்கன் பிறர் நோகச் செய்யார். மலரினும் மென்மையானது அவரது உள்ளம். எனினும் எண்ணித் துணிந்துவிட்டாரெனின், அவர் மனம் மலைபோன்ற உறுதியுடன் நிலையாய் நிற்கும். துன்பமோ தோல்வியோ அவரைச் சலிப்படையச் செய்ததில்லை. தம்மை மக்கள் பின்பற்றி மனம் உளையாமல் நிற்கும்படி ஊக்கமூட்டவல்ல தலைவர் அவர். அவர் பாமர மக்களை அன்புடன் நேசித்தார். மக்களும் அவரை மனப்பூர்வமாக நம்பி

னர். மக்களுக்குப் பிடித்த நாயகனாகத் திகழ்ந்தார்.

உள்நாட்டுப் போர்

வர்ஜீனியா, அரக்கான்ஸஸ், டென்னஸி, வட காரலைனா ஆகிய ராஜ்யங்களும் ஐக்கிய அமெரிக்காவினின்றும் பிரிந்து தென்பாகத் தனிக் கூட்டுத் தொகுதியோடு சேர்ந்தன. தென் காரலைனா ராஜ்யத்தில் ஒரு கோட்டை மீது பறந்துகொண்டிருந்த அமெரிக்கக் கொடியை தென்பாகத் தனியாட்சி சுட்டுத் தொலைத்தது. உள்நாட்டுப் போர் மூண்டுவிட்டது. இது தொடக்கம் 1861 ஏப்ரல் 12.

படையில் சேர வாரீர் என்றார் ஜனாதிபதி லிங்கன். 75,000 பேர் வேண்டுமென்றார். வடபாக சேனாதிபதியாக ஜார்ஜ் மெக்ளளனை நியமித்தார். ஜூலை மாதம் நடந்த மோதலில் தென்பாகம் வெற்றிகொள்ள வடபாகம் அதிர்ச்சி அடைந்தது.

புதிய சேனாதிபதி மெக்ளளன் மாதக் கணக்கில் கவாத்துப் பழக்கினார். அவரால் ஒன்றும் ஆகவில்லை. தளபதி யு. எஸ். கிராண்ட் தலைமையில்தான் வடபாகம் முதல் வெற்றிபெற்றது. லிங்கன் சேனாதிபதி மெக்ளளனுக்குச் சீட்டுக் கிழித்துவிட்டு கிராண்டை சேனாதிபதியாக்கினார்.

போருக்கு ஆயத்தமாயிராத வடபாகம் தோல்விமேல் தோல்வி கண்டது. அந்த நேரத்தில் லிங்கனுடைய மகன் வில்லி இறந்து போனான்; அவருடைய துயரம் பெருகிற்று. அதே சமயத்தில் தன்னைப்போலத் துன்பப்படுவோரின் மனச் சுமையையும் நன்குணர்ந்து அவர் அடிக்கடி போர் வீரர் வைத்திய விடுதிகளுக்கும், பாசறைகளுக்கும் போய், வருந்துவோருக்கு அன்புள்ளத்துடன் ஆறுதல் மொழிகள் சொல்லி வந்தார். அவர்மீது மக்களுடைய பற்றும் நம்பிக்கையும் வளர்ந்தன.

உள்நாட்டுப் போர் நடந்த காலமெல்லாம் அவருடைய அறையில் தமது முன்பு விவிலிய வேத நூல் வைத்திருந்தார் எனவும், அதனை அவர் அடிக்கடி படிப்பது வழக்கம் எனவும், இரவெல்லாம் உறங்காது இறைவனைத் தொழுது வேண்டினார் எனவும் சொல்வார்கள்.

அடிமைகளுக்கு விடுதலை

உள்நாட்டுப் போரின் நோக்கம் யாது? அமெரிக்க ஐக்கியம் உருக்குலையக் கூடாது என்பதையே அவர் முதன்மையான நோக்கமாகக் கொண்டார். அதற்கடுத்த முக்கியமான நோக்கம் அடிமைகள் விடுதலை என்பதை அவர் உணர்ந்துகொண்டார். ஆயிரக்கணக்

கான அடிமைகள் தென்பாக ஊர்களிலிருந்து தப்பி வடபாகத்திற்கு வந்தனர். இவர்கள் எல்லோருக்கும் விடுதலை வழங்கி 1862 ஜூலையில் மத்திய அரசாங்கம் சட்டம் இயற்றியது; அவர்கள் வடபாகத்துச் சேனையில் சேரவும் அச்சட்டம் இடமளித்தது.

படிப்படியாய் அடிமைகளை விடுவிக்கலாம் என்று ஆபிரகாம் லிங்கன் திட்டம் வகுத்தார். அடிமைகளை வைத்திருப்பவர்களுக்கு அரசாங்கப் பணத்திலிருந்து ஈடு கொடுத்து அடிமைகளை விடுவிக்கலாமென எண்ணினார் அவர். ஆனால் தென்பாகத்தார் அவரது எண்ணத்துக்கு உடன்படவில்லை. அதன் பின்னர் அவர் அமைதியாய்ச் சிந்தித்து, தமது அமைச்சர் குழாத்தைக்கூடக் கலக்காமல், சரித்திரப் பிரசித்திபெற்ற விடுதலைப் பிரகடனத்தை தயாரித்தார். ஆயினும் அந்தப் பிரகடனத்தைப் பகிரங்கப்படுத்த அப்போதே வேளை வரவில்லை.

சிடார் மலையிலும், புல்ரன்னிலும் வடபாகச் சேனை தோற்றது. எதிர்ப்படைத் தளபதி லீ சீறிக்கொண்டு முன்னேறினார்; மேரிலண்ட் ராஜ்யத்திற்குள் பாட்டமாக் ஆற்றைக் கடந்து எதிரிகள் நுழைந்துவிட்டார்கள். அப்போது லிங்கன் தமது அமைச்சர்களிடம் மனம் திறந்து பேசினார். இச்சண்டையில் வடபாகம் வெற்றி பெற்றால், அடிமைகளை விடுவிப்பதற்கு ஆண்டவனின் அனுமதி கிடைத்துவிட்டதாகத் தாம் கொள்ளப் போவதாகவும், அதை நிறைவேற்றுவதாக தம் மனச்சாட்சிக்கும் ஆண்டவனுக்கும் முன்னிலையில் தாம் உறுதி பூண்டிருப்பதாகவும் லிங்கன் தெரிவித்தார்.

ஆன்றீட்டம் எனுமிடத்தில் செப்டம்பர் 17-ந் தேதி லிங்கனின் வடபாகத்துச் சேனை வெற்றி ஈட்டியது. ஐந்து நாட்களுக்குப் பிறகு அவர் விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார்.

"1863 ஜனவரி முதல் தேதியன்று முதல், இனியும் என்றென்றும் விடுதலை" பெற்றவர்களாய் வாழ 40 இலட்சம் மக்களுக்கு மீட்சி கிடைத்தது.

புத்தாண்டு நாளன்று அவர் இவ்விடுதலைப் பிரகடனத்தின் இறுதிப் பத்திரத்தில் கைச்சாத்திட்டார். அப்போது அவர் சொல்லுவார்:— "வரலாறு என் பெயர் சொல்லுமாயின் அது இந்த ஒரு செயலுக்காகவே இருககும். என் உடல் பொருள் ஆவியனைத்தையும் இதில் வைத்துள்ளேன்."

லிங்கன் போர் நடத்தப் படித்தார். பெரிய படத்தைக் கொண்டு இராணுவ நடமாட்டங்களைக் கூர்ந்து ஆராய்ந்தார். இரவு பகலாய் போர் முறைகளைப்பற்றிய நூல்களை ஊன்றிப் படித்தார்; தளபதிகளுடன் கூடிப் பேசிக் கட்டளைகள் பிறப்பித்தார்.

அவர் உள்ளமோ போர் முகத்து வீரரை நினைந்து உருகியது. அவனது குடும்பத்தாரை எண்ணிப் பார்ப்பார். கவலையால் அவர்

கன்னம் ஒட்டியது. கண்கள் குழி விழுந்தன. "இனி ஒரு நாளும் எனக்கு மகிழ்ச்சி கிடையாது போலிருக்கிறதே" என்று நொந்து கொண்டார்.

ஒரு சமயம் பட்டாளத்திலிருந்து இருபது பேர் தப்பியோடிவிட்டார்கள். அவர்களைப் பிடித்துவந்த தளபதி அவர்களுக்கு மரண தண்டனை விதிக்குமாறு ஜனாதிபதி லிங்கனிடம் கோரினார். "ஏற்கனவே அழுது புலம்பும் கைம்பெண்களின் எண்ணிக்கை போதாதா? உமக்குக் கோடிப் புண்ணியம் உண்டு, இன்னும் அவர்கள் தொகையைப் பெருக்கும்படி கேளாதீர்—என்னால் முடியாது" என்றார் லிங்கன்.

1863 இலையுதிர் காலத்தில் சட்டநூகா எனுமிடத்தில் வடபாகச் சேனை வெற்றிபெற்றது. குளிர்காலம் தாண்டியதும், வடபாகச் சேனை கடும் தாக்குதல்களைத் தொடங்கிற்று. பலமான உயிர்ச் சேதம்.

படைக்கு மேலும் ஆள் வேண்டுமென்றார் லிங்கன். "இதோ வந்தோம் தந்தையே" என்று மூன்று இலட்சம் பேர் விசுவாசத்துடன் திரண்டனர்.

1864-ல் ஜனாதிபதி லிங்கன் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1865 ஜனவரியில் மத்திய சட்ட சபை (காங்கிரஸ்) கூடியது. லிங்கனின் நெடுங்காலக் கனவு நனவாயிற்று. அமெரிக்க அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. எந்த விடத்தும் அடிமை வைத்திருக்க எவருக்கும் உரிமையில்லை என்ற திருத்தம் சட்டமாயிற்று.

1865 மார்ச் 4-ச் தேதி, ஆபிரகாம் லிங்கன் இரண்டாம் முறை ஜனாதிபதியாகப் பதவியேற்று காங்கிரஸில் சொன்னார்:-

சமாதானம் சிரஞ்சீவியாயிருக்குமாக

"போர் என்னும் இப்பெருந் துன்பம் விரைவிலே ஒழியவேண்டும் என்று ஆர்வமுடன் வேண்டுகிறோம்; மிகவும் ஆசைப்படுகிறோம்......எவர்மீதும் நமக்குக் கெடுமதி வேண்டாம். அனைவரிடமும் அன்பு பாராட்டுவோம். இறைவன் அருளியவாறு, நியாயம் என்று தெரியும் நெறியில் நிலையாய் நிற்போம். இந்த உறுதியுடன் இன்று நமக்குள்ள கடமையை நாம் செய்து முடிப்போம். நாட்டுக்கு விளைந்துள்ள சேதங்களைச் சீர்செய்யவும், போரிட்ட வீரனைப் பேணி நிற்கவும், வீரப் புருஷனை இழந்த மனைவியையும், தந்தையை இழந்து அனாதையான அவன் மக்களையும் கவனித்துக் காக்கவும் முயல்வோமாக—நியாயமான நிலையான சமாதானம் நமக்குள்ளும் பிறநாடுகளுடனும் உண்டாகவும் அது பேணி வளர்க்

கப்படவும் உகந்ததனைத்தையும் செய்ய முயல்வோமாக."

வடபாகச் சேனை ஜார்ஜியாவின் தலைநகரத்தை ஊடுருவியது. எப்ரல் மூன்றாந் தேதி தென்பாகத் தலைநகர் ரிச்மண்டைக் கைப் பற்றியது. ஆறு நாட் கழித்து தென்பாகப் படைத் தலைவன் லீ சரணடைந்தார். சண்டையும் ஓய்ந்தது.

லீ அடைக்கலம் புகுந்த செய்தி கேட்டதும், லிங்கன் தமது அமைச்சர்களைக் கூட்டினார். யாவரும் கண்ணீர் பெருக மண்டி யிட்டவாறு கடவுளுக்கு நன்றி கூறினர்.

உள்நாட்டுப் போர் ஓய்ந்ததென்று எங்கும் வெற்றிக் களிப்பு தாண்டவமாடியது. நாட்டின் ஐக்கியம் காக்கப்பட்டது! அடிமை கள் விடுதலை அடைந்தனர்! மாபெரும் தலைவன், மகாத்மா என்று லிங்கனை மக்கள் போற்றினர். ஒடுக்கப்பட்டோருக்கு விடு தலை வழங்கிய உயர்ந்தோன் என்று புகழ்ந்தனர்.

லிங்கன் தென்பாகத்துத் தலைநகராயிருந்த ரிச்மண்டை நோக் கிச் சென்றார்; வழியில் நீக்ரோவர் சிலர் ஆற்றுப் படித்துறை வெட்டிக்கொண்டிருக்கக் கண்டார். அவர்களுள் முதியவர் லிங் கனை அடையாளங் கண்டுகொண்டார். அவர் ஓடோடி வந்து அண் ணலின் காலைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டார். மற்ற நீக்ரோக் களும் அவ்வாறே செய்தனர். "என்ன புண்ணியம் பண்ணினமோ?

கெட்டிஸ்பர்க்கில் சொற்பெருக்காற்றுகிறார்



படைச்சவனே தங் குழந்தைங்களை விடுதலை பண்ண இவங்க உரு வத்திலே வந்திருக்காரு, வாங்க, வணங்குங்க" என்று லிங்கனைக் கண்டு அந்த நீக்ரோக் கிழவர் கொஞ்சும் மொழிகளில் தலைவனை வணங்கினார். "அடியேனுக்கு அன்று, ஆண்டவனுக்கு மண்டி யிடுங்கள். அவனுக்கு நன்றி கூறுங்கள்" என்று லிங்கன் உணர்ச் சிப் பெருக்குடன் அந்த அன்பர்களுக்குப் பதில் சொன்னார்.

புகழுடல் பெற்றுவிட்டார்

ஆபிரகாம் லிங்கன் உயர்ந்த உள்ளம் படைத்தவர். தேர்ந்த அறிவாளி. அனைவரிடத்தும் அன்பு செலுத்தினார். அவர் போல் மக்கள் மனங்கவர்ந்த பெரியார் உலகில் சிலரே.

நண்பர் எவரையும் அவர் கைவிட்டதேயில்லை. சிறு உதவி செய்ய வாய்ப்புக் கிடைத்தாலும் அதை அவர் நழுவவிடமாட்டார். கடைசியாக அவர் செய்த காரியம் குற்றவாளி ஒருவனுக்கு உயிர்ப் பிச்சை அளித்ததாகும். அவன் படையைவிட்டு ஓடியவன். அவன் மன்னிப்பு விண்ணப்பம் 1865 எப்ரல் 14-ந் தேதி ஜனாதிபதி லிங்கன் கைக்கு வந்தது. அவர் அதில் கையெழுத்திட்டு அவனைக் காப்பாற்றினார்.

அன்றிரவு லிங்கன் தமது மனைவியுடன் நாடகம் பார்க்கச் சென்றார். போர்டு நாடகக் கொட்டகை நாட்டின் மகிழ்ச்சியை எடுத்துக்காட்டிற்று. போர் முடிந்து அமைதி மீண்டதன் காரண மாக, அடிமை விடுதலை அடைந்ததன் காரணமாக எங்கும் களிப் புக் கரைபுரண்டோடிற்று. நாடகத்தலம் தோரணங்களால் அழ குறத் திகழ்ந்தது.

மணி பத்தடித்து இருபது நிமிஷங்களாயிற்று. எல்லோரும் கண் கொட்டாமல் நாடகக் காட்சிகளில் மூழ்கியிருக்கும் வேளை தனிலே, யாரோ சுட்ட சத்தம் காதைத் துளைத்தது. இருக்கையி லிருந்து குப்புற வீழ்ந்தார் லிங்கன். சுட்டவன் மேடைக்குத் தாவினான்; தடுக்கி விழுந்தான்; பிடிபடுமுன் தப்பிச் சென்று குதிரையேறி மறைந்து விட்டான். "அவன் ஜனாதிபதியைக் கொன்றுவிட்டான்" என்று ஸ்ரீமதி லிங்கன் கதறினார். எதிர்வீட் டில் லிங்கனைத் தூக்கிக்கொண்டுபோய் படுக்க வைத்தனர். இரவு முழுவதும் அவர் மூர்ச்சையாய்க் கிடந்தார். தலைநகர் வாஷிங்டன் முழுவதும் அவரைக் காப்பாற்றுமாறு பிரார்த்தனை செய்தது. ஆனால் மறுநாள் காலையில், அவர் பிரக்ஞை திரும்பப் பெறாம லேயே இவ்வுலகை நீத்துச் சென்றார்.

அருகேயிருந்த அவரது பெரும் நண்பர் ஸ்டாண்ரன் "இனி அவர் எல்லோருக்கும் எக்காலத்துக்கும் உரியவராகிவிட்டார்" என்று சிரம் தாழ்த்தியவாறு சொன்னார்.



தலைநகர் வாஷிங்டனில் லிங்கன் மணி மண்டபத்தில்
காணப்படும் வீரத் திருவுருவம்

அமெரிக்க அரசாங்க தகவல் பகுதி வெளியீடு

9-8220